# முயல் தீவில் பவளப்பாறைகள் பற்றி ஆய்வு

பனைக்குளம்,அக்.18–

முயல் தீவில் பவளப்பாறைகளின் வளர்ச்சி பற்றி ஆய்வு செய்யப்பட்டது.

## இயற்கை சீற்றம்

மண்டபம் அருகே நடுக்கடலில் உள்ள முயல்தீவு கடல் பகுதியில் உள்ள பவளப் பாறைகள் இயற்கை சீற்றங்களால் பாதிப்படைந்துள்ளதா, பவளப் பாறைகளின் வளர்ச்சி எந்த அளவிற்கு உள்ளது என்பது குறித்த ஆய்வு மத்திய கடல் வள ஆராய்ச்சி மையம் சார்பில் தொடங்கி உள்ளது.

மாவட்ட வன உயிரின காப்பாளர் அசோக்குமார்,உதவி வன பாதுகாவலர் ராஜ்குமார் ஆகியோர் தொடங்கி வைத்தனர். தொடர்ந்து கடல் வள ஆராய்ச்சியாளர் சண்முகராஜ் தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வனத்துறையினர் இணைந்து முயல் தீவில் கடலின் அடியில் ஜி.பி.எஸ்.கருவி உதவியுடன் பவளப் பாறைகளின் வளர்ச்சி, பாதிப்புகள் குறித்தும் ஆய்வு செய்தனர்.

## ஆய்வு

இதுபற்றி மண்டபம் வனச்சரகர் சதிஷ் கூறியதாவது:–

மன்னார் வளைகுடா பகுதியான தீவு பகுதிகளை சுற்றிலும் உள்ள பவளப்பாறைகளின் வளர்ச்சி குறித்தும்,அதன் புள்ளி விவரங்கள் குறித்தும் கடல்வள ஆராய்ச்சி மையம் சார்பாக 21 தீவுகளிலும் உள்ள பவளப் பாறைகளை ஆய்வு செய்யும் பணி நடக்கிறது.

முயல் தீவு பகுதியில் பவளப் பாறைகளை ஆய்வு செய்ததில் 60 சதவீதம் முதல் 70 சதவீதம் வரை பவளப்பாறைகள் நன்கு வளர்ச்சியடைந்து உள்ளன. ஒவ்வொரு தீவு பகுதியிலும் 1 வாரம் வரை இந்த ஆய்வு நடைபெறும்.

மேலும் தீவை சுற்றிலும் உள்ள கடல் பகுதியில் பவளப் பாறைகள் இல்லாத இடங்களில் பவளப் பாறைகள் வளர சிலாப்புகள் செய்து அந்த சிலாப்புகளில் பவளப்பாறைகளை கட்டி வைத்து விடுவோம்.இது போன்று வைக்கும்பட்சத்தில் அந்த இடத்தில் பவளப்பாறைகள் வளரத் தொடங்கி விடும்.

## வடிவம்

தீவுகளை சுற்றிலும் கிளைவடிவம்,மூளை வடிவம்,விரல்,மலைவடிவம் என பல வகையான பவளப்பாறைகள் உள்ளன.16 ஆண்டுகளுக்கு பிறகு தீவு பகுதிகளில் பவளப் பாறைகளின் வளர்ச்சி,பாதிப்பு குறித்த ஆராய்ச்சி நடைபெறுகிறது. மீன்களின் இனப்பெருக்கத்திற்கு பவளப்பாறைகள் முக்கிய காரணியாக உள்ளது. எனவே பவளப் பாறைகள் சேதமாகாமல் பாதுகாக்க நாட்டுப்படகு மற்றும் விசை படகுகளில் மீன் பிடிக்க செ லும் மீனவர்கள் தீவை ஒட் யுள்ள பவளப் பாறைக உள்ள பகுதியில் செல்லவே டாம் என அறிவுறுத்தப்படு றது.

இவ்வாறு அவர் கூறினா



முயல் தீவு பகுதியில் கடல் வள ஆராய்ச்சியாளர்கள், வனத்துறையினர் பவளப்பாறைகளை கடலுக்குள் மிதக்க விட்ட காட்சி.

# குண்டு எறிதலில் மாணவி முதலிட

கீழக்கரை,அக்.1



மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த பள்ளி மாணவிகள் கலந்துகொண்டனர்.

இதில் குண்டு எறிதல் போட்டியில் கீழக்கரை இஸ்லாமியா உயர்நிலைப்பள்ளி மாணவி வாசுகி முதலிடம் பெற்று மண்டல அளவிலான போட்டிக்கு தகுதி பெற்றார்.

# பா.ம.க. ஆலோசனை கூட்டம்

ராமநாதபுரம்,அக்.1

ராமநாதபுரம் மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் இளைஞ சங்க ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு ச மாவட்ட தலைவர் சரவணன் தலைமை தாங்கினார். ச குமார் முன்னிலை வகித்தார். இதில் மாநில இளைஞர் ச

# ...த்துராமலிங்க தேவர் ஜெயந்தி விழா